# இலங்கை ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை

இதவடிவம் - 06

## பயனுள்ள கற்றல் செயற்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்தல்

ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளை
கல்வி, உயரகல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
இசுருபாய

## இலங்கை ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை

### இதவடிவம் - 06

### பயனுள்ள கற்றல் செயற்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்தல்

| இதவடிவத்தின் பெயர் | பயனுள்ள கற்றல் செயற்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்தல் |
|---|---|
| நோக்கங்கள் | 1. பாடத்திட்டத்தின் முக்கிய கூறுகளை செயற்பாட்டுத் திட்டத்துடன் இணைத்துக் கொள்ளுதல்.<br>2. செயற்பாட்டுத்திட்டத்தை பொருத்தமான முறையில் தயாரித்துக் கொள்ளுதல்.<br>3. கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிடுவதன் முக்கியத்துவத்தை விளக்குதல்.<br>4. பலவித அணுகுமுறைகளை பின்பற்றி செயற்பாட்டுத் திட்டங்களை உருவாக்கி பயன்படுத்துதல். |
| கற்றற் பேறுகள் | 1. பாடத்திட்டத்தை பகுப்பாய்வு செய்து அதன் முக்கிய கூறுகளை வெளிப்படுத்திக் காட்டுவார்.<br>2. பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வருடாந்த வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரிப்பார்.<br>3. பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தவணைக் குறிப்பைத் தயாரிப்பார்.<br>4. பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வருடாந்த செயற்பாடுகளைத் திட்டமிடுவார்.<br>5. விடயம் பாடம் மற்றும் கற்போனுக்கும் ஏற்ற விதத்தில் பலவிதமான செயற்பாடுகளை (பாடத்தை) திட்டமிடுவார்.<br>6. பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டுக்கான கருவிகளை திட்டமிடுவார். |
| உள்ளடக்கம் | **1. பாடத்திட்டத்தின் முக்கிய கூறுகள்**<br><br>**2. பாடத்திட்டமும் பாட உள்ளடக்கமும்**<br>• தேசிய பொது நோக்கங்கள், பொதுத் தேர்ச்சிகள்<br>• பாடத்திட்டத்தின் சிறப்பு நோக்கங்கள் மற்றும் பாடத்தேர்ச்சிகள்<br>• பாட உள்ளடக்கத்தின் குறுக்கும் நெடுக்குமான தொடர்புகள்<br><br>3. **மாணவர்கள் மற்றும் அவர்களின் கற்றல் முறை தொடர்பிலானவை**<br>• மாணவர்களின் கற்றல் மாதிரிகள், கற்றல் அனுபவங்கள் மற்றும் கற்றல் பிரச்சினைகள்<br>• மாணவர் நடத்தை, ஆற்றல், தேவைகள் மற்றும் இயலுமைகள்<br>• மாணவர்களில் தாக்கம் செலுத்தும் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் பௌதீக சூழல்<br>• மாணவர்களின் உடல், உள, சமூக மற்றும் அறிவுரீதியான வளர்ச்சிப் பண்புகள் மற்றும் தன்மைகள் |

| | |
|---|---|
| | **4. பல்வேறு கற்றல் - கற்பித்தல் முறைகளும் அவற்றை நடைமுறைப்படுத்தும் முறையும்**<br>• யதார்த்தபூர்வமான வாழ்க்கைக்கான கற்றல் அனுபவம் (Real World Learning) நிஜ உலக கற்றல் (Authentic Learning) யதார்த்தபூர்வமான கற்றல்<br>• சுய கற்றல் மற்றும் கட்டுருவாக்கக் கற்றலை ஊக்குவித்தல் (Self – Directed and constructive Learning)<br>• 21ம் நூற்றாண்டுக்கு ஏற்ற வகையில் மாணவர்களில் படைப்பாற்றல் (Creative) மற்றும் விமர்சன சிந்தனை (Critical thinking) என்பவற்றை வளர்த்தல்<br>• கூட்டுக் கற்றலை (Collaborative Learning) வளர்த்தல்<br>• தொடர்பாடல் திறன்கள் (Communication Skills)<br>• கலப்புக்கற்றல், மகிழ்ச்சிகரமான கற்றல் மற்றும் கூட்டுக்கற்றல் விருத்தி ஏற்படும் வகையில் வகுப்பறை செயற்பாடுகளை முகாமை செய்தல்<br>• தகவல் மற்றும் தொழில்நுட்பப் பயன்பாடு<br><br>**5. தவணைக்குறிப்பு மற்றும் பாடக்குறிப்பு**<br>• தவணைக் குறிப்பு<br>• பாடக் குறிப்பு<br>    • குறிக்கோள் அடிப்படையிலான திட்டம்<br>    • கற்றல் பேறு அடிப்படையிலான திட்டம்<br>    • 5E தேர்ச்சி அடிப்படையிலான திட்டம்<br><br>**6. கணிப்பீட்டு, மதிப்பீட்டு உத்திகளைத் திட்டமிடல்**<br>• மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தை கண்காணிக்கவும் கற்றலை மேம்படுத்தவும் பின்னூட்டம் மற்றும் முன்னூட்டங்களை வழங்குதல்<br><br>***மேற்குறிப்பிட்ட உள்ளடக்கத்துக்குப் பொருத்தமான மேலதிகத் தேடல் பரிந்துரைக்கப்படுகின்றது.*** |
| **கற்றல் முறை** | சுய கற்றல் |